# ஊழியப் பணியின் கசப்புள்ள இனிப்புத் தன்மை (12:25-13:14)

*பதினோறாம் அதிகாரத்தின் முடிவில், அந்தியோகியாவில் இருந்த சகோதரர்கள் "யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணஞ் சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள். அப்படியே அவர்கள் சேகரித்து, பர்னபா சவுல் என்பவர்களுடைய கையில் கொடுத்து, மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள்" (11:29, 30) என்று நாம் கண்டோம். லூக்கா தரும் விபரங்கள், நாள் வரிசைக் கணக்கு முறையின்படியானதென்றால், பர்னபாவும் சவுலும், "ஏரோது ராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கிய" (12:1) காலத்தில் யூதேயாவுக்கு வந்து சேர்ந்தார்கள், மற்றும் அவர்கள் யாக்கோபு கொலை செய்யப்படுகையில், பேதுரு சிறைச் சாலையில் அடைக்கப்படுகையில் அப்பகுதியில் இருந்தார்கள் என்றே ஆகின்றது. பர்னபாவும் சவுலும் அங்கு நடந்த ஜெபக் கூட்டத்தில், இந்தக் கூட்டம் பர்னபாவின் அத்தை/சித்தியான மரியாளின் வீட்டில் கலந்து கொண்டிருந்திருக்கலாம். அப்பொழுது பேதுரு தாம் அற்புதவிதமாய் விடுதலையாக்கப் பட்டதைக் கூறும்படி, அக்கூட்டத்தை இடைமறித்திருக் கலாம்.*

*அப். 11:30ல் விடுபட்ட இடத்திலிருந்து அப். 12:25 தொடருகின்றது: "பர்னபாவும் சவுலும் தர்ம ஊழியத்தை நிறைவேற்றின பின்பு ... எருசலேமை விட்டுத் திரும்பினார்கள்" (12:25). பவுல் தேவாலயத்தில் கண்ட தரிசனமானது அவர் எருசலேமுக்குச் சென்ற இப்பயணத்தில் நடைபெற்றிருக்கலாம் என்று சிலர் நினைக்கின்றார்கள் (22:17-21). இந்தத் தரிசனத்தைக் குறித்து, பவுல் மனமாற்றத்திற்குப் பிறகு முதன் முறையாக எருசலேமுக்கு வந்ததைப் பற்றி (9:26-30)*

படித்தபோது கற்றுக் கொண்டோம். விநியோகம் நடந்தது எப்படியென்றோ அல்லது யூதேயாவில் இருந்தவர்களின் பதில்செயல் எப்படியிருந்தது என்பது பற்றியோ நமக்கு எதுவும் கூறப்படவில்லை, ஆனால் அவர்களில் பெரும்பான்மை யானோர் தங்களுக்குக் கொடுக்கப்பட்டவற்றை அன்பின் ஆவியோடு பெற்றிருப்பார்கள் என்று நாம் நம்புகின்றோம். பர்னபாவும் சவுலும் "மாற்கு என்னும் மறுபேர்கொண்ட யோவானைக் கூட்டிக் கொண்டு" (12:25) அந்தியோகியா வுக்குத் திரும்பினார்கள். வசனம் 12:12ல் யோவான் மாற்கு பற்றிய குறிப்பொன்றை நாம் பார்த்தோம்; அவர் பர்னபாவின் இனத்தார் ஆவார் (கொலோ. 4:10; KJVயில், மாற்கு, பர்னபாவின் சகோதரன்/சகோதரியின் மகனாயிருக்கலாம் என்ற யோசனை முன் வைக்கப்படுகின்றது. "Cousin" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ஆங்கில வார்த்தையாகிய "cousin" என்பதைப் போல் அவ்வளவு தீர்மானமானதல்ல; அது ஒரு நெருங்கிய உறவினன் என்பதையே குறிப்பதாகும். [எனவே தமிழில் "இனத்தான்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது]). ஆறுதலின் மகன் என்னப்பட்டவர் இந்த இளைஞனைக் கர்த்தருக்கென்று ஒரு ஊழியக்காரனாக்குவதற்கு நம்பிக்கையுடன் இருந்திருப்பார் என்பது உறுதி. இந்த மனிதர்கள் கடைசியில் அந்தியோகியா வுக்கு வந்தபோது, சொல்வதற்கு அவர்களிடம் இருந்த வரலாற்று நிகழ்ச்சிகள் நிறைய இருந்தன! அவர்களின் ஊழியமானது ஒப்படைக்கப்பட்ட பொறுப்பாய் இருப் பதற்குப் பதில், கிளர்ச்சியூட்டும் அனுபவமாக இருந்தது!

பர்னபாவும் சவுலும் திரும்பி வந்த நிகழ்ச்சியானது அதிகாரம் 13 தொடங்க அரங்கம் அமைக்கின்றது:

> அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபா வும், நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனே கூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும், தீர்க்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது; "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள்" என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார். அப்பொழுது உபாசித்து ஜெபம் பண்ணி,

*அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள் (13:1-3).*

அப். 13 ஒரு முக்கியமான அதிகாரம் ஆகும். அப். 13:1-3 வசனப்பகுதியானது அப். நட. புத்தகத்தின் நிகழ்ச்சிகளினுடைய கால இடை நிலையாய் உள்ளது. இவ்வசனப்பகுதிக்கு முன்புள்ள பகுதியில் முக்கிய நபராக பேதுருவும், முக்கிய நகரமாக எருசலேமும், சுவிசேஷத்தைப் பெறும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக யூதர்களும் இருந்தனர். அப். 13:1-3க்குப் பிறகு, முக்கிய நபராக பவுலும், முக்கிய நகரமாக அந்தியோகியாவும், சுவிசேஷத்தைப் பெறும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக புறஜாதியாரும் இருக்கின்றனர்.

சுவிசேஷ ஊழியத்திற்கான இயேசுவின் திட்டத்தில் மூன்றாம் நிலையை நாம் அடைவது என்பது அப். நட. 13ன் இன்னொரு தனிச் சிறப்பாகும். அப். 1:8ல் இயேசு, "நீங்கள் ... எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்று கூறியிருந்தார். முதல் நிலை எருசலேம் ஆகும் (எருசலேமில் சுவிசேஷ ஊழியம் தொடங்கியதை அதிகாரம் 2ல் நாம் கண்டோம்). இரண்டாம் நிலை யூதேயா மற்றும் சமாரியா ஆகும் (அதிகாரம் 8ல் கிறிஸ்தவர்கள் சிதறடிக்கப்பட்டதையும், பிலிப்பு சமாரியாவுக்குச் சென்றதையும் நாம் கண்டோம்). நிறைவாக, சபையானது நிலைநாட்டப்பட்டு பதினைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களான பின்பு, சுவிசேஷமானது "பூமியின் கடைசி பரியந்தமும்" கடைசியில் எடுத்துச் செல்லப்பட்டதை நாம் காணுவோம். 13ம் அதிகாரத்தின் முடிவில், விசுவாசியாத யூதர்களை நோக்கிப் பவுல், "நீர் பூமியின் கடைசி பரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி ... கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம்" (13:47) என்று கூறப்போகிறார்.

மற்றும், அதிகாரம் 13ல் பவுலின் நற்செய்திப் பயணங்கள் தொடங்குகின்றன. (நம்மில் அநேகர் அப். நட. புத்தகத்தை நினைக்கும்போது, உடனடியாக பவுலின் பயணங்களைப் பற்றி நினைக்கின்றோம்.) இந்த ஊழியப் பயணங்களைப் படிக்கையில், இழந்துபோகப்பட்டு, மரிக்கும் நிலையில் உள்ள உலகத்திற்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் உத்வேகத்தை

நாம் உணருவோம் என்று நான் நம்புகின்றேன்.

இந்தப் பாடத்தில், பவுலின் முதல் பயணத்தின் தொடக்கத் தைக் கூறும் 13:1-14 வசனப் பகுதிகளை நாம் காண்போம். அடுத்து வரும் எட்டு அல்லது ஒன்பது அதிகாரங்களில் நாம் பவுலின் ஊழியப் பிரயாசங்களைப் படிக்கவிருப்பதால், ஊழியப் பணியின் கசப்புள்ள இனிப்புத் தன்மை பற்றிப் படித்துத் தொடங்குவது பயனுள்ளதாயிருக்கும். அநேக வேத வசனப் பகுதிகள் (வெளி. 10:9-11), சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் உள்ள இனிப்புத் தன்மை மற்றும் கசப்புத் தன்மை பற்றிப் பேசுகின்றன.

## ஊழியப் பணி: இனிப்பு (13:1-3)

**ஒரு மாபெரும் குடும்பம் (வ. 1)**

வசனம் 1, "அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே" என்று தொடங்குகின்றது. முந்திய பாடம் ஒன்றில் நாம், அந்தியோகியாவில் இருந்த விசேஷித்த சபையைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம்: அது, புறஜாதியாரை வெளிப்படையாய் அணுகிய முதல் பிராந்திய சபையாகவும், யூதர் மற்றும் புறஜாதியார் ஆகிய இரு தரப்பாரும் உறுப்பினர்களாயிருந்த முதல் பிராந்திய சபையாகவும், இன்னொரு பிராந்திய சபைக்குப் பொருள் சகாயம் அளித்த முதல் பிராந்திய சபையாகவும் இருந்தது. இப்பொழுது அந்தியோகியாவின் சபையானது ஆத்துமாக்களுக்கான உலகளாவிய கண்ணோட்டம் கொண்ட முதல் பிராந்திய சபையானது, ஊழியப் பணியை நீங்கள் செய்யும்போது அந்தியோகியாவில் இருந்த சபையின் கண்ணோட்டம் கொண்ட பிராந்திய சபைகளுடன் நீங்கள் ஐக்கியம் கொள்ளுகின்றீர்கள்.

**மாபெரும் நண்பர்கள் (வ. 1)**

நீங்கள் ஊழியப்பணி செய்யும்போது, தேவனுடைய திராட்சத் தோட்டத்தின் சிறந்த சில ஊழியர்களுடன் இணைந்து வேலை செய்ய வாய்ப்பைப் பெறுகின்றீர்கள். அந்தியோகியாவில் இவ்வித இணைந்து ஊழியம் செய்தவர்களின் பெயர்பட்டியல், வசனம் 1ல் தரப்படுகின்றது: "அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும்,

*நீகர் என்னப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனே கூட வளர்க்கப்பட்ட*[1] *மனாயீனும், சவுலும், தீர்க்கதரிசிகளாயும், போதகர்களாயும் இருந்தார்கள்.''* ஐந்து மனிதர்கள் "தீர்க்க தரிசிகள் மற்றும் போதகர்கள்'' என்று பட்டியலிடப் பட்டிருக்கின்றார்கள் (இவ்விரண்டு சொற்றொடர்களுமே, ஏவுதலினால் பேசிய மனிதர்கள் என்பதையே அநேகமாய்க் குறிப்பிடுகின்றன[2]). முதலாவது, ஆறுதலின் மகனாகிய பர்னபாவின் பெயர் பட்டியலிடப்பட்டுள்ளது. அடுத்தது "*நீகர் என்னப்பட்ட சிமியோன்*[3] என்பவர்'' பெயர் உள்ளது. சிமியோன் என்பது அவரது யூதப் பெயர், நீகர் என்பது அவரது ரோமப் பெயராகும் ("நீகர்'' என்பது "கறுப்பு'' என்பதன் இலத்தீன் பெயராகும், அநேகமாக இது சிமியோனின் கறுப்பு நிறத்தைக் குறித்திருக்கலாம்). அடுத்தது, சிரேனே ஊரைச் சேர்ந்த லூகியின் பெயர் உள்ளது. அநேகமாக அவர் அந்தியோகியா வந்து சபையை நிலைநாட்டிய "*சிரேனே பட்டணத்தாரில். ...*" (11:20) ஒருவராயிருந்திருக்கலாம். (லூகி என்பது கிரேக்க மொழியில் ஒரு பொதுவான பெயராகும். புதிய ஏற்பாட்டில் அநேகர் இப்பெயரால் குறிப்பிடப் படுகின்றார்கள்.) பிறகு, "*காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனே கூட வளர்க்கப் பட்ட மனாயீன்*'' (ஏரோது அந்திப்பாவைப் பற்றிய குறிப்புகளை பார்க்கவும்) என்பவரின் பெயர் உள்ளது. இவர் அரசாங்கத் தொடர்பு உள்ளவரா யிருந்தார். (இவர்கள் பற்றிய மற்ற விபரங்களை அறிய நாம் எவ்வளவாய் ஆவல் உள்ளவர்களாயிருக்கின்றோம்!) சவுல் கடைசியில் குறிப்பிடப் படுகின்றார், ஒருவேளை இது அந்தியோகியாவில் இருந்த சபையில் இவரது நிலையைக் குறிப்பிடுவதாயிருக்கலாம். அவர் அந்த காலகட்டத்தில் ஓராண்டுக்கும் சற்று அதிகமான நாட்களே அந்த சபையுடன் இருந்து கொண்டிருந்ததாலும் (11:26), மற்றும் அவர் பர்னபாவின் ஆதரவில் அங்கு வந்தவராகக் கருதப்பட்டார்.

பட்டியலை மறுபடியும் பாருங்கள்: ஐந்து மனிதர்களும் உலகத்தின் வித்தியாசப்பட்ட பகுதிகளில் இருந்து வந்தவர்கள் ஆவார்கள்; அவர்கள் சமுதாயத்தின் வித்தியாசப்பட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள்; அவர்களின் தோலின் நிறம் கூட வித்தியாசப்பட்டதாய் இருந்தது. இயேசுவின் மீது அன்பும்,

மக்களின் மீது அன்பும், இவ்விரு சாராரையும் ஒன்றாக்கும் விருப்பமும் அவர்களுக்குள் இருந்த பொதுவான விஷயம் ஆகும். ஆஸ்திரேலியாவின் சிட்னியில் இருந்த - மற்றும் எனக்கு நன்கு பழக்கப்பட்ட மற்ற - ஊழியக்குழுவினர் ஒவ்வொரு வரும் கர்த்தர் மேல் கொண்டிருந்த அன்பை நான் இவ்விடத்தில் நினைவுகூருகின்றேன். நீங்கள் ஊழியப் பணியில் ஈடுபடும்போது இவ்விதமாய் மக்களுடன் கலந்து பழக வேண்டியிருக்கும்!

**மாபெரும் ஐக்கியம் (வ. 2)**

அந்தியோகியாவில் இருந்த சபையின் முக்கியமான ஊழியக்காரர்களின் பெயர்களைப் பட்டியலிட்ட பிறகு, வசனம் 2, "அவர்கள்[4] கர்த்தருக்கு ஆராதனை செய்து,[5] உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது. ..." என்று தொடங்குகின்றது. "சிலவற்றைச் செய்ய வேண்டும்" என்று காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்காகப் பரிசுத்த ஆவியானவர் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. கர்த்தருடைய ஊழியத்தில் *செயல்படுகின்றவர்களாயிருப்பவர்களில்* இருந்தே அவர் தனது தெரிவை மேற்கொண்டார். சபையில் உங்களுக்குரிய விசேஷ நிலையை (ஊழியத்தை) இன்னும் நீங்கள் கண்டடையவில்லையென்றால், உங்களால் செய்ய முடிந்தவற்றில் நீங்கள் இன்னும் ஈடுபடாததே அதற்குக் காரணமாயிருக்கலாம். "சுறுசுறுப்பானவர்களையே தேவன் அழைக்கின்றார்."

உபவாசித்தல் (ஒரு குறிப்பிட்ட நேரம் உணவு உண்ணாமலேயே இருத்தல்) என்பது அப். நட. புத்தகத்தில் இவ்விடத்தில்தான் முதல் முதல் குறிப்பிடப்படுகின்றது.[6] பழைய ஏற்பாட்டில் உபவாசம் என்பது, அடிப்படையில் *மனவருத்தத்தை* விளக்குவதாய் இருந்தது. புதிய ஏற்பாட்டில் உபவாசம் என்பது அடிப்படையில், *முன்னுரிமைகளைக்* குறிப்பதாயிருக்கின்றது. ஆதிக் கிறிஸ்தவர்களுக்கு உணவுண்பது என்பது முக்கியமானதாயிருக்கவில்லை. சில வேளைகளில், தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அவர்கள் உணவு வேளைகளைக்கூட கண்டு கொள்ளாமல் இருந்தனர்.

நீங்கள் ஊழியப்பணியில் ஈடுபட்டிருக்கும்போது, தனது முன்னுரிமைகளை நிலைப்படுத்தியுள்ள ஒரு ஐக்கியத்தின் பாகமாக நீங்கள் இருந்து, தேவனுக்கும், மனிதருக்கும் ஊழியம்

*செய்ய ஒப்புக் கொடுத்திருக்கும் மக்களுடன் நீங்கள் இணைந்துள்ளீர்கள். இதைவிடச் சிறந்த ஐக்கியம் வேறு இல்லை!*

***ஒரு மாபெரும் உணர்வு (வ. 2, 3)***

*அவர்கள் ஆராதனை செய்து உபவாசித்துக் கொண்டிருந்த போது, ''பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்'' (வ. 2ஆ). பரிசுத்த ஆவியானவர் பேசியபோது அநேகமாய் சபையானது கூடி வந்திருக்கும்; ஒருவேளை, இந்த உலகத்தாருக்கு இயேசுவின் செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்காக அவர்கள் ஒரு ஜெபக் கூட்டம் கூடியிருக்கலாம். மீண்டும் ஒருமுறை, தேவன் உலக மக்கள் யாவருக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் தமது திட்டத்தை ஊக்கப்படுத்த விரைவான நடவடிக்கை எடுத்தார். ஏவப்பட்ட பிரசங்கியார்கள் அந்த பிராந்திய சபையில் இருந்ததால் (வ. 1), பரிசுத்த ஆவியானவர் அநேகமாக அவர் களில் ஒருவர் மூலமாகவே பேசியிருப்பார்.*

*இரண்டு மனிதர்கள் அனுப்பப்பட வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்டார். இயேசு "குறிப்புக் கட்டளையின்" படி மனிதர்களை அனுப்பியபோது இரண்டி ரண்டு பேர்களாகவே அனுப்பினார் (மாற். 6:7, 11). ஊழியத் தைச் செய்வதில் பயன்படுத்தக்கூடிய நல்ல நடைமுறையாக இது இருக்கின்றது. ''ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் ... ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கி விடுவான்'' (பிர. 4:9, 10). வசனம் 1ல் முதலாவதாகவும், கடைசியாகவும் குறிப்பிடப்பட்ட பர்ன பாவும், சவுலுமே அந்த இரண்டு மனிதர்கள் ஆவார்கள். பர்ன பாவைத் தேர்வு செய்தது பற்றி யாரும் வியப்படைந்திருக்க மாட்டார்கள்; சவுலைத் தேர்வு செய்தது பற்றி சிலர் தங்கள் புருவங்களை உயர்த்தியிருப்பார்கள்.[7] முதல் ஊழியப்பயணத் திற்காகப் பரிசுத்த ஆவியானவர் அந்தியோகியாவின் சபையில் இருந்தவர்களிலேயே மிகச் சிறந்த மனிதர்கள் இருவரைத் தேர்ந்தெடுத்தார். இன்றைய நாட்களில் சிலர், சிறந்த மனிதர்களை நாம் நமது பிராந்திய சபையில் பிரசங்கிக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், அதற்கடுத்துள்ள சிறந்த*

மனிதர்களை மற்றவர்களுக்குப் பிரசங்கிக்க அனுப்ப வேண்டு மென்றும் நினைக்கின்றார்கள், ஆனால், பரிசுத்த ஆவியான வரின் சிந்தை இவ்விதமாய் இருக்கவில்லை.

"பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக் காக அவர்களைப் பிரித்து விடுங்கள்" (வ. 2ஆ) என்பதே பரிசுத்த ஆவியானவரின் செய்தியாயிருந்தது. இவ்விடத்தின் வினைச் சொல் அமைப்பானது, இது அம்மனிதர்களை அழைத்த நிகழ்ச்சியல்ல என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. எல்லா மனிதர்களுக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும்படியான பணிக்கு சவுல் தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னரே அழைக்கப்பட்டு விட்டார் (26:12-18 ஐக் காணவும்). ஒருவேளை பர்னபாவும் கூட சில காலத்திற்கு முன்னதாகவே கர்த்தரால் அழைக்கப் பட்டிருக்க வேண்டும். இப்பொழுது அந்தியோகியாவில் இருந்த சபையார், அவ்விருவரையும் அவர்களின் விசேஷித்த ஊழியத்திற்காகப் ''பிரித்து வைக்கும்'' சிலாக்கியத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

பரிசுத்த ஆவியானவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் அந்தியோகியாவில் இருந்த சபையானது ஒரு விசேஷித்த ஆராதனையை நடத்தியது, அந்த ஆராதனையில் அவர்கள் ''உபவாசித்து, ஜெபம் பண்ணி அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்'' (வ. 3). இது பர்னபாவுக்கும் சவுலுக்கும் விசேஷித்த வரத்தைக் கொடுப்ப தற்காக நடந்த ஆராதனை அல்ல; அவர்கள் ஏற்கனவே, ஏவப்பட்ட பிரசங்கியார்களாகத்தான் இருந்தார்கள் (வ. 1). அந்தியோகியாவில் இருந்த சபையானது ஆவியானவரிடத் திலிருந்து ஒரு ஆவிக்குரிய வரத்தை அப்போது அவர்களுக்குப் பெற்றுத் தரவில்லை, ஆனால் அச்சபை, ஆவியானவரின் செயல்பாட்டை உறுதிப்படுத்தியது. புரூஸ் இதை இவ்வாறு விளக்குகிறார்,

> இந்த நிகழ்ச்சியில் பர்னபா மற்றும் சவுல் ஆகியோரின்மேல் கைகளை வைத்த செயலானது, அவர்கள் ஏற்கனவே பெற்றி ராத ஒரு வரத்தையோ அல்லது அதிகாரத்தையோ அவர்களுக் குக் கொடுக்கவில்லை; ஆனால், அந்தியோகியாவில் இருந்த சபையானது ... அவர்களுடன் இருந்த தனது ஐக்கியத்தை வெளிப்படுத்தி அவர்களைத் தங்கள் தூதர்கள் அல்லது

*“அப்போஸ்தலர்கள்” என்று ஏற்றுக் கொண்டதை இதன் மூலம் அர்த்தப்படுத்தியது. அவர்கள் முழுச்சபையாராலும் அனுப்பப்பட்டார்கள், அவர்கள் மறுபடி அந்தியோகியா வுக்குத் திரும்பி வந்தபோது முழு சபையாரையும் கூடிவரச் செய்து தங்களின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள் (14:26, 27).*

*அந்த ஆராதனையானது அவ்விரு மனிதர்களுக்கும் மற்றும் சபையாருக்கும் பரஸ்பரம் நன்மையளிப்பதாயிருந்தது. அந்த ஆராதனை பர்னபாவும் சவுலும் தங்களது கடமையின் பாரத்தை உணரும்படி செய்தது (14:23). அந்த ஆராதனை, உறுப்பினர்கள் அம்மனிதர்களுடனான தங்கள் உறவுகளை மனதில் ஆழப்பதியச் செய்தது: இவர்கள் அவர்களின் (சபையாரின்) “அப்போஸ்தலர்கள்” - அவர்களால் அனுப்பப் பட்டவர்கள் ஆவார்கள் (‘‘அப்போஸ்தலர்கள்’’ என்றால் அனுப்பப்பட்டவர்கள் என்று அர்த்தம், அவர்கள் சபையாரால் அல்லது கர்த்தரால் அனுப்பப்பட்டவர்களாயிருக்கலாம். பவுலும் பர்னபாவும் 14:14ல் ‘‘அப்போஸ்தலர்கள்’’ என்று குறிப்பிடப்பட்டார்கள்). “உபவாசம்” என்ற வார்த்தையானது இது மிகவும் கவனிக்கத் தக்க ஒரு விஷயமாகும் என்று மறைமுகமாய் உணர்த்துகின்றது, இதை அவசரமாய்ச் செய்யவும் கூடாது; அவர்கள் (பசியைக் கூடக் கவனியாமல்) போதிய அளவு நேரம் எடுத்து இவ்வூழியத்தைச் சரியாகச் செய்வதற்கு முயற்சி யெடுத்தார்கள், நாமும் கூட இன்றைய நாளில் ஊழியக் களத்திற்கு ஒருவரை அனுப்பும்போது அவரைப் பிரித்தெடுத்து வைப்பதற்கு - அவரது மனதிலும் நமது மனதிலும் பதியும்படியான - ஒரு பரிசுத்த ஆராதனையை ஏறெடுக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும் (14:23).*

*ஆராதனை நிறைவுற்றபோது, அந்தியோகியாவின் சகோதரர்கள் “அவர்களை அனுப்பினார்கள்” (வ. 3ஆ). ஒரு நிமிடத்திற்கு, பட்டணத்தை விட்டுப் புறப்படும் பர்னபா அல்லது சவுல் என்று உங்களை எண்ணிக் கொள்ளுங்கள், சகோதரர்களின் ஜெபங்கள் மற்றும் வாழ்த்துக்கள் உங்கள் செவிகளில் ரீங்காரம் செய்கின்றன. அவ்விரண்டு மனிதர்களும் உணர்வுகளின் கலவையில் இருந்தார்கள் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை; அறியாததை எதிர்கொள்ளப் போவதில் உள்ள உணர்வுக் கிளர்ச்சியையும், கடினத்தன்மையையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆயினும், அவர்கள் தாங்கள்*

எங்கிருக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்பினாரோ அதையே மிகச் சரியாகச் செய்தார்கள். தங்களுடைய ஜீவனுக்காக அவர்கள் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள் என்று ஊழியக்காரர்கள் மாபெரும் உணர்வடைய முடியும்.

அந்தியோகியாவில் இருந்த கிறிஸ்தவர்களிடம் பேசியது போல் பரிசுத்த ஆவியானவர் இன்று நம்மிடம் நேரடியாகப் பேசுவதில்லை, ஆனால் ஒவ்வொரு கிறிஸ்தவரின் வாழ்க் கைக்கும் தேவன் ஒரு திட்டம் இன்றும் வைத்திருக்கின்றார் என்று நான் நம்புகின்றேன்.[8] உங்கள் வாழ்க்கைக்கான அந்தத் திட்டத்தைக் கண்டறிவதென்பது எப்போதுமே சுலபமாயிரா மற் போகலாம், ஆனால் அதற்காக முயற்சி செய்வது பலனுள்ள தாகும். உங்களுக்கான அவரின் திட்டத்தைக் கண்டுபிடிக்க, அவர் உங்களுக்குக் கொடுத்துள்ள தாலந்துகளை நினைத்துப் பார்ப்பதும், இவைகள் உங்கள் சொந்த வளர்ச்சிப் பெருக்கத்திற்காகக் கொடுக்கப்படவில்லை, மாறாக அவரது நாமத்தை மகிமைப்படுத்தவே கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் புரிந்துகொள்வது ஒரு வழியாகும். அவரது சித்தத்தைக் கண்டறிய இன்னொரு வழி, வாய்ப்புக்கான திறந்த கதவு களைக் காண்பது ஆகும். எழுதுவதில் எனக்குள்ள விருப்பமும், இன்றைக்கான சத்தியம் பத்திரிகைக்காக எழுதும்படி சரியான நேரத்தில் எடி க்ளோயர் எனக்கு விடுத்த அழைப்பும், இப்பணியானது தேவன் தமது சித்தத்தினால் எனக்களித்த நிறைவான பணிகளில் ஒன்று என்று என்னை ஏற்றுக் கொள்ளச் செய்திருக்கின்றன.

தேவனுடைய ஊழியத்தில் நீங்கள் ஒரு விசேஷித்த பணிக்கென்று பிரித்து வைக்கப்பட்டிருப்பதை விசுவாசிக் கிறீர்கள் என்று நான் நம்புகின்றேன். அந்தப் பணி மிகப் பெரியதாகவோ அல்லது வசிகரமுடையதாகவோ இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை - அது ஒரு கலசம் தண்ணீர் கொடுக்கும் பணியாகக்கூட இருக்கலாம் (மாற். 9:41) - ஆனால் அது உங்களுக்கான விசேஷித்த பணியாக இருக்க வேண்டும். உங்களின் விசேஷித்த ஊழியத்தைக் காண்பது என்பது மாபெரும் உணர்வு மிக்க ஒரு விஷயமாகும்!

ஊழியப் பணியைப் பொதுப்படையாய் நாம் கவனித்தால், "ஒரு மாபெரும் எதிர்காலம்" முதலான (மத். 28:18-20; தானி.

12:3) கூடுதல் இனிமைகளை நாம் குறிப்பிட முடியும், ஆனால் நமது வேதபாடப் பகுதியை நாம் தொடர்ந்து பார்க்க வேண்டும். இதை நாம் பார்க்கையில் ஊழியப்பணியில் கசப்புள்ள பக்கமும் இருப்பதை நாம் காணுகின்றோம்.

## ஊழியப் பணி: கசப்பு (13:4-14)

பர்னபாவும் சவுலும், யோவான் மாற்குவைத் "தங்கள் உதவிக்காரனாக" (வ. 5) அழைத்துச் சென்றார்கள். "அப்படியே அவர்கள் பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்டு,[9] [பதினைந்து அல்லது பதினாறு மைல்கள் மேற்கு நோக்கிப் பயணம் செய்து] செலுக்கியா [அந்தியோகியாவின் துறைமுகமாய் செயல்பட்ட] பட்டணத்துக்கு வந்து, கப்பல் ஏறி அங்கிருந்து சீப்புருதீவுக்குப் போனார்கள்" (வ. 4). சீப்புரு ஒரு பெரிய தீவு (சீப்புரு தீவு 140 மைல்கள் நீளமும் 60 மைல்கள் அகலமும் உடையதாகும் [224 கி.மீ நீளம், 96 கி.மீ அகலம்]) ஆகும், தாமிரச் சுரங்கங் களுக்கும், கப்பல் கட்டும் தொழிலுக்கும் அத்தீவு புகழ் பெற்றதாகும். அவர்கள் முதலில் சீப்புரு தீவைச் சென்றடையக் காரணம் ஒருவேளை, பர்னபா (அக்குழுவின் முன்னோடி) அத்தீவைச் சேர்ந்தவர் (4:36) என்பதும், அவர் தமது குடும்பத்தார் மற்றும் நண்பர்களிடத்தில் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்பினார் என்பதுமாக இருக்கலாம்.[10] அத்தீவை அடைவதற்கான எழுபது மைல் பிரயாணம் அக்காலத்தில் குறிப்பிடத் தக்க முக்கியத்துவம் பெற்றிரா விட்டாலும், அது ஆழமான விசேஷ நோக்குடையதாய் இருந் திருக்கும். "Gospel" என்ற வார்த்தையிலுள்ள "go" என்ற வார்த்தையை ஒரு பிராந்திய சபை கடைசியாகச் செய்தது.

அம்மூன்று மனிதர்களும் சீப்புரு தீவை அடைந்தபோது, அவர்களின் நல்லுணர்வுகள் சற்று காலம் நீடித்து இருந் திருக்கும். அவர்கள் நண்பர்களின் தோழமையில் இருந்தார்கள்; அவர்கள் கர்த்தரின் ஊழியத்தைச் செய்து கொண்டிருந் தார்கள்; அவர்கள் ஒரு அழகான இடத்தில் இருந்தார்கள். அத்தீவு முன் காலங்களில் ''மகிழ்ச்சியின் தீவு'' என்ற அர்த்தத்தில் மக்காரியா என்று அழைக்கப்பட்டது. சீப்புரு தீவிற்கு ஊழியப் பணிக்காகச் செல்வதை, கோவாவில்[10] சென்று பிரசங்கிப்பதற்கு ஒப்பிட முடியும். ஆயினும், விரைவிலேயே

*அந்த ஊழியக் குழுவினர், தங்கள் முயற்சிகளின் முதல் கசப்புச் சுவையை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.*

***அதைரியப்படுத்தப்படுதலும் மனச் சோர்வும் (வ. 5, 6)***

*சீப்புரு தீவின் கிழக்கில் உள்ள பெரு நகரத் துறைமுகமும், அந்தத் தீவின் வியாபார மையமுமாக இருந்த சாலமி பட்டணத்தில் அந்தக் குழு கரையேறிற்று. "சாலமி பட்டணத்தில் வந்தபோது அவர்கள் யூதருடைய ஜெப ஆலயங்களில் தேவவசனத்தைப் பிரசங்கித்தார்கள்" (வ. 5). சீப்புரு தீவில் யூதமக்கள் தொகை ஏராளமாயிருந்தது, எனவேதான் நாம் இவ்விடத்தில் ஜெப ஆலயங்கள் என்ற பன்மைச் சொல்லைப் பார்க்க முடிகின்றது. முதலில் ஜெப ஆலயத்தில் பிரசங்கிப்பது என்பது ஊழியப்பயணங்களில் பின்பற்றிய நடைமுறை மாதிரியாக இருந்தது. இது சுவிசேஷத்தை முதலாவது யூதர்கள் கேட்பதற்கு வாய்ப்பளித்தது (ரோமர் 1:16), மற்றும் தேவ பயமுள்ள புறஜாதியாரைத் தொடர்பு கொள்ளவும் இது தொடங்குமுனையாக இருந்தது.*

*சாலமியில் தங்கள் ஊழியத்தைத் தொடர்ந்து, பர்னபாவும் சவுலும் "அத்தீவு முழுவதிலும்" சென்று (வ. 6) - தொன்னூறு அல்லது அதற்கதிகமான மைல்கள் - தாங்கள் சென்ற எல்லா நகரங்களிலும் நிச்சயமாகவே நற்செய்தியைப் பிரசங்கித்த வண்ணம் சென்றார்கள். இந்தத் தொடக்க கால முயற்சிகள் பற்றி லூக்கா கூறியவைகளல்ல, ஆனால் அவர் கூறாமல் விட்டவைகளே குறிப்பிடத் தக்க உண்மையாயிருக்கின்றன. அப். நடபடிகளில் இவ்விடத்தில் சுவிசேஷத்திற்குப் பதில் செய்கையென்ன என்று குறிப்பிடப்படவில்லை. எனக்கு, ஆஸ்திரேலியாவின் சிட்னியில் என்னுடைய தொடக்க கால ஊழிய நாட்கள் நினைவுக்கு வருகின்றது. சீப்புரு தீவு "மகிழ்ச்சியான தீவு" என்று அறியப்பட்டது; ஆஸ்திரேலியா வானது "நல் அதிர்ஷ்டத்தின் நாடு" என்று அழைக்கப்படுகின்றது. இரு தீவுகளுமே இயற்கை வளங்கள் மற்றும் கண்ணுக்கு அழகிய காட்சிகள் ஆகியவற்றால் ஆசீர்வதிக்கப் பட்டுள்ளன - ஆனால் இவையிரண்டுமே உலகத்தில் சுவி சேஷத்தை ஏற்றுக் கொள்ளும் இடங்கள் என்ற தகுதியைப் பெறுவதில்லை. என்னிடம் ஒரு ஆஸ்திரேலியர், "எங்களிடம் ஆதவன் உண்டு, அலைகடல் உண்டு, சமுதாயப் பாதுகாப்பும்*

உண்டு, எங்களுக்கு தேவன் எதற்கு?'' என்று என்னிடத்தில் கூறினார். நேர்மையாக சத்தியத்தைத் தேடும் ஆத்துமாக் களைக் கண்டடைய எங்களுக்குச் சற்றுக்காலமாயிற்று. எங்கள் ஊழியத்தில் உண்மையையும், தேவனிடத்தில் விசுவாசத்தை யும் கொண்டு எங்களது முயற்சி சிறு பலன் காண நாட்கள், வாரங்கள், மாதங்களாயின. ஊழியப்பணி செய்கின்ற வேளை யில் அதைரியப்படுவதும், மனச்சோர்வடைவதும் வெகு சுலபமாகும்.

**பழி தூற்றப்படுதலும் வஞ்சிக்கப்படுதலும் (வ. 6-12)**

கடைசியாக பர்னபா, சவுல் மற்றும் யோவான் மாற்கு ஆகியோர் அத்தீவின் மேற்கு முனையில் இருந்த பாப்போ என்ற துறைமுகப் பட்டணத்தை அடைந்தார்கள். பாப்போ பட்டணமானது சீப்புரு தீவின் தலை நகராகவும், அத்தீவின் மேன்மை தாங்கிய அதிபதியினுடைய தங்குமிடமாகவும் இருந்தது.

> அவர்கள் பாப்போ பட்டணம் வரைக்கும் தீவைக் கடந்து வந்தபோது, பர்யேசு என்னும் பேர் கொண்ட மாய வித்தைக்காரனும்[11] கள்ளத் தீர்க்கதரிசியுமான[12] ஒரு யூதனைக் கண்டார்கள். அவன் விவேகமுள்ள மனுஷனாகிய செர்கியு பவுல் என்னும் அதிபதியுடனே கூட இருந்தான் (வ. 6, 7அ).

லூக்கா, ''அத்தீவின் அதிபதி தனக்கு உதவியாளனாக பர்யேசு என்பவனைக் கொண்டிருந்தான்'' என்று கூறவில்லை ஆனால் ''மாயவித்தைக்காரனும் கள்ளத்தீர்க்கதரிசியுமான ... அவன் விவேகமுள்ள மனுஷனாகிய செர்கியுபவுல் என்னும் அதிபதியுடனே கூட இருந்தான்'' என்றே கூறினார். ரோமப் பிரதிநிதியின் மனமாற்றத்தின் மீதல்ல, ஆனால் சாத்தானின் பிரதிநிதியுடன் எதிர்த்து நின்ற செயலின் மீதே இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

விவேகமுள்ள மனிதனாகிய செர்கியு பவுல் தனக்கு ஆலோசனை கூற ஒரு மந்திரவாதியை வைத்துக் கொண்டி ருந்தது பற்றி நாம் ஆச்சரியப்படலாம், ஆனால் அக்காலத்தில் மூட நம்பிக்கைகள் மலிந்திருந்தன. அதிகாரத்தில் உள்ளவர்கள், மந்திரம் கூறும் மாயவித்தைக்காரர்களைத் தங்கள் தனிப்பட்ட ஆலோசகர்களாக நியமிப்பதும் பொதுவான வழக்கமா

யிருந்தது. ஆயினும் செர்கியு பவுல் திறந்த மனம் உள்ளவனா கவே இருந்தது பற்றிய பாராட்டு அவரையே (செர்கியு பவுலையே) சாரும். பர்னபாவும் சவுலும் பிரசங்கித்ததை அவன் கேள்விப்பட்ட பொழுது, அவர்களை அழைப்பித்து "தேவ வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான்" (வ. 7ஆ).

இயேசுவின் செய்தியை செர்கியு பவுல் ஏற்றுக் கொண்டால், தனது செல்வாக்குள்ள பதவிக்கு ஆபத்து நேரிடும் என்று பர்யேசு அறிந்திருந்தான். ஆகையால், பர்னபாவும் சவுலும் பேச முயற்சித்தபோது அவன் இடையூறு செய்து, அவர்களையும் அவர்களின் செய்தியையும் அவமானப் படுத்தினான். "மாயவித்தைக்காரன் என்று அர்த்தங் கொள்ளும் பேரையுடைய அந்த எலிமா (ஏனென்றால் அவன் பெயர் இவ்விதமாகவே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) என்பவன் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகை தேடி, அவர்களோடு எதிர்த்து நின்றான்'' (வ. 8). பர்னபா, சவுல் ஆகியோரை அதைரியப்படுத்தி மனச்சோர்வடையப் பண்ண முடியாமல் போனபோது சாத்தான் அவர்கள் மேல் பழி தூற்றி, வஞ்சிக்க முயற்சி செய்தான்.

இருளின் அதிபதியானவன் வெளிச்சத்தின் அதிபதியினிடத் தில் சவால் விட்டான் - சவுல் அந்தச் சவாலுக்குப் பதில் கூறாமல் விட முடியவில்லை:

> அப்போழுது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய்[13] அவனை உற்றுப் பார்த்து: எல்லாக் கபடமும்[14] எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓய மாட்டாயோ? (வ. 9, 10).

இவ்விடத்தில் சவுலின் வார்த்தைகள், புதிய ஏற்பாட்டில் காணப்படும் கடுமையான வார்த்தைகள் என்ற வகையில் உள்ளன. "பர்யேசு" என்பதன் நேரடி அர்த்தம் "இயேசுவின் [யோசுவாவின்] மகன்"[15] என்பதாகும். சவுல் அவ்விடத்தில், "நீ உன்னை யோசுவாவின் மகன் என்று நினைத்துக் கொண்டிருக் கலாம், ஆனால் உண்மையில் நீ பிசாசின் மகனாகவே இருக்கின்றாய்" என்று கூறினார் (யோவான் 8:44ல் காணவும்). "பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே" என்றுள்ளது.

*சவுல் அவன் மீது ஒரு சாபத்தைக் கூறினார்: "இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன் மேல் வந்திருக்கிறது, சில காலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய் என்றான்" (வ. 11அ). வசனம் 11 ஆ-வில் நாம், "உடனே மந்தாரமும்*[16] *இருளும் அவன் மேல் விழுந்தது, அவன் தடுமாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான்" என்று படிக்கின்றோம். அப்போஸ்தலர் ஒருவரால், இன்னொரு மனிதன் உடல் உபாதையைப் பெறும்படி நிகழ்ந்த அற்புதம் இது ஒன்றே ஒன்றுதான்.*[17] ஆயினும் சவுல் தேவனுடைய பிரதிநிதியாக மட்டுமே இருந்தார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும், அவர் மந்திரவாதியிடம், *"கர்த்தருடைய கை உன் மேல் வந்திருக்கிறது"* என்று கூறினார். தேவன் இந்த நிகழ்ச்சியில் அவ்வளவு கொடிய தண்டனையைக் கொடுத்தது ஏன்? *சர் வில்லியம் ராம்சே அவர்கள்,* "ரோமானிய உலகத்தில் நிலவிய மனித சித்தத்தின் பலத்த செல்வாக்கைப் பர்யேசு பிரதிநிதித்துவப்படுத்தினான், கிறிஸ்தவமானது இராஜ்யத்தை வெற்றி கொள்ள வேண்டுமென்றால், இந்தச் செல்வாக்கானது அழிய வேண்டும் அல்லது கிறிஸ்தவத்தினால் அது அழிக்கப்பட வேண்டும்" என்றார். நன்மை மற்றும் தீமை ஆகிய இரண்டு சக்திகளுக்குமிடையில் யுத்தக் கோடுகள் வரையப் பட்டிருந்தன.[18]

*"சில காலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய்" (வ. 11அ)* என்ற வார்த்தைகளைக் கவனியுங்கள். பர்யேசுவின் அந்த நிலை நிரந்தரமானதல்ல; அவன் மறுபடியும் பார்வை அடைவான், அதே வேளையில், தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் தமது பார்வையை இழந்த சவுலைப் போலவே அவனும் சிந்தித்து மனந்திரும்பக் கால அவகாசம் தரப்பட்டது.

இந்த அற்புதம் வழக்கமற்றதாயிருந்தாலும், இதன் விளைவு அப்படியிருக்கவில்லை: *"அப்பொழுது அதிபதி சம்பவித்ததைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து அதிசயப்பட்டு, விசுவாசித்தான்" (வ. 12).* அற்புதத்தைக் கண்டல்ல, மாறாக *"கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்தே"* அதிபதி அதிசயப் பட்டான். சுவிசேஷமே இரட்சிப்பின் தேவபெலனாய் இருந்தது, இருக்கின்றது (ரோமர் 1:16). அந்த அதிபதி கிறிஸ்தவராய் ஆனாரா? ஒருவேளை ஆகியிருக்கலாம்; *"விசுவாசித் தான்"* என்ற வார்த்தையானது அப். நட. புத்தகத்தில் ஞானஸ்

*நானம் உட்பட முழுமையான மனமாறுதல் நிகழ்ச்சியைக் குறிக்கவே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது.*[19] *இருப்பினும், லூக்காவைப் பொறுத்தமட்டில் துன்மார்க்க சக்திகள் எதிர்கொள்ளப்பட்டு - தோற்கடிக்கப்பட முடியும் என்பதே இந்த நிகழ்ச்சியிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய குறிப்பிடத்தக்க பாடமாய் இருந்தது!*

*ஊழியச் செயல்பாடுகளில் எப்பொழுதுமே சாத்தானின் எதிர்ப்பு இருந்துகொண்டுதான் உள்ளது. சாத்தானால் சத்தியத்தை எதிர் கொண்டு நிற்க முடியாது. சமீபத்தில், கிழக்கு ஐரோப்பிய நாட்டில் வேதாகமப் புத்தகங்கள் விநியோகிக்கப் பட்டபோது, அவைகள் உண்மை வேதாகமங்கள் அல்ல, பொய்யான வேதாகமங்கள் என்றும், அவைகளை எறிந்து விட வேண்டும் என்றும் உள்ளூர் மத அதிகாரிகள் வதந்தியைப் பரப்பினார்கள். நீங்கள் வசனத்தைப் பரப்ப முயற்சி செய்தால், உங்கள் பெயரைச் சீர்குலைக்க வஞ்சனை பயன்படுத்தப் படுவதைக் கண்டு ஆச்சரியமடைய வேண்டாம்.*

**கைவிடப்படுதலும் நம்பிக்கை குலைதலும் (வ. 13)**

*மாயவித்தைக்காரனைப் பற்றிய தமது விபரத்தில் லூக்கா, கவனிக்க வேண்டிய ஒரு சொற்றொடரைத் தவழ விட்டார்: "அப்பொழுது, பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் ..." (வ. 9). அந்நாட்களில் இருந்த அநேக மக்களைப் போலவே,சவுலும் ஒன்றுக்கு மேற்பட்ட பெயருடையவராய் இருந்தார். சவுல் என்ற தமது எபிரெயப் பெயருடன் கூடுதலாக அவர் பவுல் என்ற ரோமப் பெயரையும் பெற்றிருந்தார்.*[20] *அந்த சந்தர்ப்பம் வரையிலும் அவரது (சவுலின்) எபிரெயப் பெயரையும் அதற்குப் பின்பு அவரது ரோமப் பெயரையும் லூக்கா பயன்படுத்தினார். பெயரில் ஏற்பட்ட இந்த மாற்றம் குறிப்பிடத்தக்கதாகும் (பவுல் தமது நிருபங்களில் தம்மை அடையாளப்படுத்தவதற்குத் தமது ரோமப் பெயரையே பயன்படுத்தினார்). சிலர், ரோம அதிபதியின் பெயருக்கும், இந்த அப்போஸ்தலரின் பெயருக்கும் இடையே ஒரு தொடர்பைக் காண்கின்றார்கள், ஆனால் அது ஒத்திசைவாக இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். இந்த அப்போஸ் தலரின் தனிச் சிறப்பான ஊழியம் புறஜாதியாருக்கென்று திரும்பியதைத் தெரிவிப்பதற்காக லூக்கா, பவுலின் எபிரெயப்*

பெயரிலிருந்து ரோமப்பெயருக்கு மாறியிருக்கலாம். இதன் பிறகு திரும்பிச் செல்லுதல் என்பது இல்லாதிருந்தது!

ஊழியக் குழுவினர் பாப்போவில் தங்கள் ஊழியத்தை முடித்தபோது, குறிப்பிடத்தக்க இன்னொரு மாற்றம் ஏற்பட்டது. வசனம் 13, "பின்பு பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் பாப்போ பட்டணத்தை விட்டுக் கப்பல் ஏறி" என்று தொடங்குகின்றது. இது வரைக்கும் அக்குழுவின் பெயர்ப் பட்டியலில் பர்னபாவின் பெயர்தான் முதலாவதாக இருந்தது; இந்த சந்தர்ப்பம் தொடங்கி, பவுலே வழக்கமாக முதலாவதாகக் குறிப்பிடப்பட்டார்.[21] அந்தச் சிறிய குழுவுக்குப் பவுலே ஒப்புக் கொள்ளப்பட்ட முன்னோடியாக ஆனார்.[22]

அம்மூன்று மனிதர்களும் பாப்போவில் இருந்து வடக்கே சுமார் 150 மைல்கள் பிரயாணம் செய்து, ஆசியா மைனரின் கடற்கரையோரமாய் வந்து சேர்ந்தார்கள். அநேகமாக அவர்கள் அத்தாலியா துறைமுகத்தில் கரையேறி (14:25) செஸ்துரஸ் நதியின் வழியே ஏழு மைல்கள் கடந்து சென்று பம்பிலியாவின் தலைநகரான பெர்கே பட்டணத்திற்குச் சென்றிருக்கலாம். பெர்கே சென்று சேர்ந்தபோது, அவர்கள் குழுவில் மூன்றில் ஒரு பகுதி அவர்களைக் கைவிட்டுச் சென்றதால் பெரிய நிலை மாற்றம் உண்டாயிற்று. "யோவான் அவர்களை விட்டுப் பிரிந்து, எருசலேமுக்குத் திரும்பினான்" (13:13ஆ).

யோவான் மாற்கு அவர்களை விட்டுச் சென்றது ஏன் என்று நாம் அறியவில்லை. ஒருவேளை அவருக்கு வீட்டு நினைவு ஏற்பட்டிருக்கலாம். ஒருவேளை, ஊழியப் பணியானது அவருக்கு ஒரு வசீகரமான அனுபவமாய் இராமல், கடினமான பணியாக இருந்திருக்கலாம். ஒருவேளை நாட்டின் உட்பகுதியில் செல்லும் பாதைகளில் ஏற்பட்ட அபாயங்களினால் அவர் பயமடைந்திருக்கலாம். ஒருவேளை, அவர் தமது இனத்தானாகிய பர்னபா அக்குழுவின் தலைவராயிராமல், பவுல் அந்தப் பொறுப்பில் இருந்த உண்மையைக் கையாள இயலாமல் போயிருக்கலாம். யோவான் மாற்குவின் காரணம் எதுவாயிருப்பினும், அவரது முடிவு பவுலை ஆழமான இடர்பாட்டுக்குள்ளாக்கியது (15:38, 39). யோவான் விட்டுச் சென்றதாக லூக்கா கூறினார் (13:13); அவர் கைவிட்டுச் சென்றதாக பவுல் கூறினார் (15:38). (தமிழில் இவ்விரு வசனப்பகுதிகளிலும்

*‘‘விட்டுப் பிரிந்து’’ என்ற வார்த்தைதான் பயன்படுத்தப் பட்டுள்ளது.* KJV *யிலும் இவ்விரு வசனப் பகுதிகளிலும்* “departed” *என்ற வார்த்தைதான் பயன்படுத்தப் பட்டுள்ளது.* NKJV *யிலும் இது போன்றே உள்ளது.* NASB *யிலும்* NIV *யிலும், 13:13ல்* “left” *என்றும், 15:38ல்* “deserted” *என்றும் உள்ளது.)*

*அநேக வருடங்களாக நான், ஊழியக்களத்தில் இருக்கும் ஊழியர்கள் தன்னம்பிக்கையிழந்து, உற்சாகக் குறைவடையும் படியாக அநேக ஊழியர்கள் ஒளியற்று, உற்சாகம் இழந்து, வீடு திரும்புகின்றதை நான் கண்டிருக்கின்றேன்.[23] இது ஊழியப் பணியில் உள்ள கசப்புத் தன்மையின் ஒரு பாகம் ஆகும். நம்மை விட்டு விலக மாட்டேன் என்று வாக்குத்தத்தம் செய்தவர் தேவன் ஒருவரே என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும் (எபி. 13:5).*

***அபாயமும் வியாதியும் (வ. 14)***

*பாரப்பட்ட இருதயத்துடன் இருந்தாலும், பவுலும் பர்னபாவும் ஊழியப் பாதையை விட்டு விலகவில்லை. அவர்கள் கலாத்தியா நாட்டின் ரோம ஆளுகைக்குட்பட்ட பகுதியில் முக்கிய பட்டணமாயிருந்த பிசீதியாவின் அந்தியோ கியாவை நோக்கி நாட்டின் உள்புறமாய்ச் சென்றார்கள். அங்கு சென்று சேர்வதற்கு அவர்கள் உலகிலேயே மிகவும் வஞ்சகமான சில பகுதிகளின் ஊடாகப் பயணம் செய்ய வேண்டியதாய் இருந்தது. அந்தியோகியா, வடக்கில் 100 மைல்களுக்கும் அப்பால், சுமார் 3,500 அடி உயரத்தில் இருந்தது. பவுலும் பர்னபாவும் அபாயமான மலைப் பாதை களினூடே ஊசியிலைக் காடுகளும், காட்டு மிருகங்களும், திருடர்களும், கள்வர்களும் நிறைந்த பாதைகளில் கடினமான பயணம் சென்றார்கள்.[24] மகா அலெக்சாந்தர் இவ்வுலகத்தை வெற்றி கொள்ள தாம் பயணம் செய்த இடங்கள் எல்லா வற்றையும் பற்றி இப்படி எழுதினார்: “பம்பிலியா நாட்டைப் போலவும், அதில் உள்ள மக்களைப் போலவும் ஒழுக்கம் கெட்ட நிலை வேறு எங்கும் இல்லை.” இது ரிக் ஆட்ச்லியின் பிரசங்கத்திலிருந்து மேற்கோள் காட்டப்பட்டது.*

*இருந்தாலும், இப்பயணத்தின் இடர்ப்பாடுகள் யாவும் சவுலின் பிரச்சனைகளிலேயே மிகக் குறைந்தவையாய் இருப்பதற்குச் சாத்தியக் கூறுண்டு. பின்னாளில், பவுல்*

பிசீதியாவின் அந்தியோகியாவில் இருந்த சபைக்கும் (மற்றும் அப்பகுதிகளில் தாம் நிலைநாட்டியிருந்த சபைகளுக்கும்) ஒரு நிருபம் எழுதினார். அந்த நிருபத்தில் அவர், "உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன்" என்று கூறினார் (கலா. 4:13). பவுல் பெர்கேயில் தங்கியிராமல் அந்தியோகியாவுக்கு சென்றதற்கு அவர் உடல் வியாதியொன்றே காரணம் என்பது அவரது வார்த்தைகளில் சுட்டிக்காட்டப்படுகின்றது. பம்பிலியா நாடானது தாழ்வான கடற்கரைப் பிரதேசமானதாலும், சதுப்பு நிலங்கள் அதிகமாய் இருந்ததாலும் (ஆகவே கொசுக்களும் அதிகம்),[25] பவுலுக்கு அங்கு மலேரியா வியாதி வந்ததாகவும், அவர் உடனே குளிர்வான, உயரமான பகுதியாகிய அந்தியோகியா பீடபூமிக்குச் செல்ல முடிவு செய்தார் என்றும் அநேகர் நினைக்கின்றார்கள். அப்படியிருந்தாலும், இல்லாவிட்டாலும், அந்தியோகியா செல்லும் அபாயமான பயணத்தின்போது பவுல் சாவுக்கேதுவான வகையில் நோய்வாய்ப்பட்டார் என்பது உறுதியாகும். "மாற்கு திரும்பிச் சென்றதில் அதிசயம் எதுவும் இல்லை; பவுல் முன்னேறிச் சென்றதுதான் அதிசயம் ஆகும்" என்று ஆட்ச்லி கூறுகிறார்.

பவுலும் பர்னபாவும் தடைபட்டு நிற்கவில்லை. "அவர்கள் பெர்கே பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்து" (13:14அ). வில்லியம் பார்க்ளே "ஒரு வாக்கியத்தில் கூறப்படும் வீரத் தன்மையே அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தின் ஆச்சரியங்களில் ஒன்று ஆகும்" என்று விமர்சனம் செய்தார்.

அபாயமும் வியாதியும் - சிறிய அல்லது பெரிய அளவில் - அநேக ஊழியக்காரர்களின் கூடவே உள்ளதாகும். இது விசேஷமாய் சகிக்க முடியாத மற்றும்/அல்லது வளர்ச்சிகுன்றிய பகுதிகளில் ஊழியம் செய்பவர்களுக்கு நிச்சயமாய் நேரிடுவதாகும். கஷ்டமான சூழ்நிலைகள் இருந்தாலும் பவுலைப் போலத் தொடர்ந்து ஊழியம் செய்பவர்களுக்காக தேவனுக்கு நாம் நன்றி செலுத்துகின்றோம்.

# முடிவுரை

இந்த சமயம் நீங்கள், "இது எல்லாம் நன்றாகத்தான் உள்ளது, ஆனால் இவைகள் எனக்கு என்ன செய்யக் கூடும்? நான் ஒரு ஊழியக்காரன் இல்லையே" என்று கேட்கலாம். நீங்கள் ஒரு கிறிஸ்தவரானால், நீங்கள் ஒரு ஊழியக்காரர் (missionary) ஆக வேண்டும். "Missionary" என்ற வார்த்தை "அனுப்பப் பட்ட ஒருவர்" என்ற அர்த்தம் தரும் இலத்தீன் வார்த்தையில் இருந்து வருகின்றது. Missionary என்ற சொல்லை வழக்கமாய் நாம் நினைக்கின்றபடி, ஒரு சபையினால் உலகத்தின் இன்னொரு பகுதிக்கு நீங்கள் அனுப்பப்படாதவராக இருக்கலாம், ஆனால் நீங்கள் ஒவ்வொரு நாளும் சந்திக்கின்ற மக்களுக்கு சுவிசேஷத்தைத் கூறும்படிக்குக் கர்த்தரால் கட்டளை பெற்றுள்ளீர்கள் (மத். 28:18-20; மாற். 16:15, 16)! நகைச்சுவை நடிகர் ஃப்லிப் வில்ஸனிடத்தில் அவரது மத சார்பு பற்றி ஒருமுறை கேட்கப்பட்டது. அவர், "நான் யெகோவாவின் பக்கம் நிற்கின்றவன், அவர்கள், நான் ஒரு சாட்சியாக வேண்டும் என்று விரும்பினார்கள், ஆனால் நான் அந்த அளவுக்கு ஈடுபாடு கொள்ள விரும்பவில்லை" என்று கூறினார். நம்மில் யாரும், சுவிசேஷத்தைப் பிரசங்கித்தலில் பக்கம் நிற்பவர்களாய் இருக்க விரும்பாமல், நமது நண்பர்கள், அயலகத்தார் மற்றும் குடும்பத்தாருக்கு சுவிசேஷத்தை பகிர்ந்து கொடுக்கும் மாபெரும் அறைகூவலில் ஈடுபட விரும்புவர் களாகவே இருப்போம் என்று நான் நம்புகின்றேன்!

ஒவ்வொரு கிறிஸ்தவருமே ஒரு ஊழியக்காரராயிருக்க வேண்டும் என்பதால், இப்பாடம் உங்களிடத்தில் அதிகம் செயல்பட வேண்டியதாயுள்ளது. நீங்கள் கர்த்தருடைய ஊழியக்காரராயிருக்கும்போது, தேவனுடைய குடும்பம், நண்பர்கள், ஐக்கியம், உங்கள் வாழ்வில் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றும் நல் உணர்வு போன்ற ஆசீர்வாதங் களைப் பெற முடியும். அதே வேளையில், நீங்கள் கர்த்தருக்காக நிற்பதில் இருக்கும் பிரியமற்ற (மகிழ்வற்ற) பக்கத்திற்கும் தயாராய் இருக்க வேண்டும். பின்வரும் "d"க்களில் ஏதேனும் ஒன்றோ அல்லது எல்லாமுமோ உங்கள் வழியில் வரக் கூடும்: discouragement and dejection (அதைரியப்படுதலும் மனச் சோர்வும்), defamation and deceit (பழி தூற்றப்படுதலும்

*வஞ்சிக்கப்படுதலும்),* desertion and disappointment *(கைவிடப் படுதலும் நம்பிக்கை குலைதலும்),* danger and disease *(அபாயமும் வியாதியும்). அவர்கள் இப்படிச் செய்யும்போது அல்லது அவர்கள் இப்படிச் செய்தால், (அப்போஸ்தலர்களைப் போலவே) அகமகிழ்ந்து களிகூருங்கள், ஏனென்றால், அவருடைய நாமத்துக்காக நீங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டிருக்கிறீர்கள் (5:41) - அவரில் நம்பிக்கையாயிருங்கள்!*

## காட்சி-உதவிக் குறிப்புகள்

*இந்தப் பாடத்தில், பவுலின் நற்செய்திப் பயணங்கள் தொடங்குகின்றன; கடைசியாக உண்மையிலேயே, பிரதானக் கட்டளையானது செயலாக்கம் பெறத் தொடங்கியது. இங்கு ஒரு நல்ல உற்சாகமளிக்கும் வார்த்தை விளையாட்டு ஒன்றுள்ளது:* gospel (good “news”) *அதாவது நற்செய்தியானது (1) எருசலேமிலும் (2) யூதேயா, சமாரியாவிலும் (1:8) எவ்விதம் பிரசங்கிக்கப்பட்டது என்பதை நீங்கள் கூறுகையில் கரும்பலகை அல்லது ஃபிளானல் போர்டில்* “N-E-W-S” *என்ற எழுத்துக்களை எழுதுங்கள். பின்பு அவ்வெழுத்துக்களைப் பின்வருமாறு மாற்றி அமையுங்கள்:*

N
W + E
S

*நற்செய்தியானது எல்லாத் திசைகளிலும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்பதற்கு இது ஒரு எளிய வலியுறுத்துகின்ற விளக்கம் ஆகும்* (north, south, east and west; *வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு) - வேறு வார்த்தைகளில் சொல்லுவ தென்றால், (3) பூமியின் கடைசி பரியந்தமும் (1:8).*

---

குறிப்புகள்

[1]“கூட வளர்க்கப்பட்ட” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க

வார்த்தையானது சற்று தெளிவற்றதாக இருக்கின்றது. ASV யில் “the foster-brother of” என்றும், RSV யில் “a member of the court of” என்றும் உள்ளது. [2]ஏவுதலினால் போதிப்பதென்பது ஆவியானவரின் வரங்களில் ஒன்றாகும் (1 கொரி. 12:28, 29). எந்த மனிதர்களுக்கு தீர்க்கதரின வரமும், எந்த மனிதர்களுக்கு போதிக்க வரமும் கொடுக்கப்பட்டது என்று நிருபிக்கச் சிலர் முயற்சி செய்திருக்கின்றார்கள். இந்த ஐந்து பேருமே இவ்விரு வரங்களையும் பெற்றிருக்கச் சாத்தியக் கூறுண்டு (சவுல்/பவுல் இவைகளைப் பெற்றிருந்தார் என்பது தெளிவு). [3]இதற்கடுத்து வருபவரின் பெயர் குறிப்பிடப்படுவது போல் இருவரும் அநேகமாக சிரேனே ஊரைச் சேர்ந்த சிமியோனாக இருக்கலாம் என்று கருதுகிறார்கள்; இவர் சிரேனே ஊரானாகிய சீமோனாக (மத். 27:32) இருக்கலாம். நாம் இதை அறியவில்லை. [4]“அவர்கள்” என்பது மேற்சொல்லப்பட்ட ஐந்து பேர்களைக் குறிக்கலாம், ஆனால் வசனம் 3ன் வெளிச்சத்தில் பார்க்கையில், அநேகமாக இது சபையார் அனைவரையும் குறிப்பதாகவே உள்ளது. [5]“Were ministering” அல்லது “ministered” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது “ஆராதிக்க” என்று அர்த்தம் கொள்ளும் வார்த்தையாகும். NIVயில் (மற்றும் தமிழிலும்) “அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து” என்றே இருக்கின்றது. புதிய ஏற்பாட்டில் உபவாசம் என்பது ஜெபத்துடன் இணைந்திருந்ததால், “உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது” என்ற சொற்றொடரானது தேவனுக்குச் செய்யப்படும் பொதுவான ஊழியம் என்பதை விட, தேவனை ஆராதித்தல் என்ற கருத்துக்கே ஆதரவாயுள்ளது. [6]KJVயில் கொர்நேலியுவின் ஜெபம் பற்றிக் குறிப்பிடும்போது அவர் உபவாசித்ததாகக் கூறப்படுகின்றது (10:30), ஆனால் இவ்விடத்தில், நம்புவதற்கேற்ற மிகச் சிறந்த வசன ஆதாரங்கள் KJVயின் இக்குறிப்புக்கு ஆதரவாயில்லே. [7]இதற்கு முன்பே, யூதேயாவுக்குப் பொருளுதவி அனுப்பி வைக்க சபையானது சவுலையும் பர்னபாவையும் தேர்ந்தெடுத்திருந்ததால் அநேகர் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனாலும் சவுல் இன்னமும் அங்கு ஒரு புதிய விசுவாசியாக இருந்ததால் சிலர் வியப்படைந்திருக்கலாம். [8]ஒவ்வொரு மனிதருடைய வாழ்க்கைக்குமான தேவனுடைய பொதுவான சித்தம் தேவனுடைய வசனத்தில் காணப்படுகின்றது. ஒரு கிறிஸ்தவரின் வாழ்க்கைக்கான தேவனுடைய விசேஷித்த திட்டத்தையே நான் கூறுகின்றேன். [9]முதல் சுவிசேஷப் பயணமானது தேவனுடைய வழி நடத்துதலின்படியானதே தவிர அந்தியோகியாவில் ‘‘ஊழியக் குழுவினால்’’ மேற்கொள்ளப்பட்ட முடிவல்ல என்பதை லூக்கா தெளிவாகக் காண்பித்தார். [10]ஊழியக்காரர்கள் சென்ற இடங்களைப் பற்றிப் பரிசுத்த ஆவியானவர் எந்த அளவுக்குக் கட்டளை கொடுத்தார் என்பதை நாம் அறியவில்லை. அவர்கள் சென்ற இடங்களை ஒருவேளை அவர்களாகவே தெரிவு செய்திருக்கலாம். அப்படி நடந்திருந்தால், அக்குழுவின் பொறுப்பாளராகச் சவுல் இருந்திருக்கும் பட்சத்தில், அவர் முதலாவது செல்ல சீப்புரு தீவைத் தேர்ந்தெடுத்திருக்க மாட்டார், ஏனென்றால் அங்கு குறைந்த பட்சம் யூதர்களுக்காவது முதலிலேயே சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருந்தது (11:19; இ.வ. ரோமர் 15:21).

[11]‘‘மாயவித்தைக்காரன்’’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது மந்திரவாதி சீமோனின் (8:9-11) நிகழ்ச்சியிலும் பயன்படுத்தப் பட்டது. பழைய ஏற்பாட்டில் மாயவித்தைக்கெதிரான கட்டளை இருந்தது. ஆனாலும் “அற்புதம் நிகழ்த்தும்” யூதர்கள் அப்பொழுது இருந்தார்கள் (மத். 12:27; லூக். 11:19; அப். 19:13). [12]ஒரு தீர்க்கதரிசி உண்மையானவனா அல்லது கள்ளத் தீர்க்கதரிசியா என்று சோதித்தறியும் வழிமுறைகளை மோசே கொடுத்திருந்தார் (உபா. 13:1-9; 18:20-22). [13]“பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய்” என்பது “பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டின் கீழிருந்து’’ என்று சுட்டிக்காட்டுகின்றது.

இங்குள்ள சந்தர்ப்பப் பொருளில் இதற்கு அற்புதத்தின் பொருள் உய்த்துணரப் படுகின்றது. [14]''கபடம்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "இரை போட்டு வலை வைத்துப் பிடித்தல்" என்று அர்த்தம் தருவதாயுள்ளது. [15]"இயேசு" என்பது "யோசுவா" என்பதன் கிரேக்க வடிவம் ஆகும். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில் யோசுவா மற்றும் இயேசு ஆகியவை பொதுவான பெயர்களாய் இருந்தன. [16]''மந்தாரம்'' என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது கண்ணில் உண்டாகும் ஒரு குறிப்பிட்ட வியாதியைப் பற்றி விளக்குவதற்கு மருத்துவர்களால் பயன்படுத்தப்படும் சொற்றொடர் ஆகும். லூக்காவின் சொல்லாக்கமானது மீண்டும் ஒரு முறை அவரது மருத்துவ அறிவுப் பின்னணியை வெளிப்படுத்துவதாயுள்ளது. [17]அதிகாரம் 5ல் அனனியா, சப்பீராள் ஆகியோருக்கு ஏற்பட்ட மரணம் தேவனிடத்திலிருந்து வந்த நேரடியான தண்டனையாயிருந்தது, அது பேதுருவினால் நடத்தப்பட்ட அற்புதம் அல்ல. [18]மோசே பார்வோனின் அரண்மனையில் இருந்த மந்திரவாதிகளுடன் எதிர்த்து நின்றதற்கும், இந்த நிகழ்ச்சிக்கும் இடையே உள்ள ஒற்றுமைகள் கூறப்படலாம் (யாத். 7-9; மற்றும் 2 தீமோ. 3:8ஐயும் காணவும்). [19]16:34ல் "தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி" என்ற சொற்றொடரானது சிறையதிகாரி யின் மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானத்தை உள்ளடக்கி யிருந்தது. இன்னொரு எடுத்துக்காட்டிற்கு கிறிஸ்புவின் மனந்திரும்புதல் குறித்து அப். 18:8ஐ 1 கொரி. 1:15 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். [20]''பவுல்'' என்றால் "சிறிய" என்று பொருள் தரும். செர்கியு பவுலின் அரண்மனையில் சவுலுக்கு "பவுல்" என்று பெயரிடப்படவில்லை; அவர்கள் சீப்புரு தீவை அடையும் முன்னரே ''பவுல் என்னப்பட்டு'' அறியப் பட்டார்.

[21]இதற்கு 2 விதிவிலக்குகள் உண்டு: (1) லீஸ்திராவில் கூடிய கூட்டத்தார் பர்னபாவை முதன்மைப் படுத்தினார்கள் (14:12, 14) மற்றும் (2) அவர்கள் எருச லேமுக்குத் திருப்பியபோது பர்னபா உயர்வான மதிப்பைப் பெற்றார் (15:12, 15). [22]இங்கு பர்னபாவிடம் இருந்த பாராட்டுதற்குரிய இன்னொரு பண்பை நாம் பார்க்கின்றோம்: அவர் எந்த நிலையில் தேவையோ அதில் இருந்து கொண்டு கர்த்தருக்கு ஊழியம் செய்ய விருப்பமாயிருந்தார். அது முன்னோடியாகவோ அல்லது பின்பற்றுபவராகவோ இருக்கலாம் - ஆனால் அவர் அதைக் குறித்து முறுமுறுக்கவில்லை. [23]ஊழியக்களத்திலிருந்து முன்னதாக வீடு திரும்புவதற்கு ஏற்புடைய காரணங்கள் இருக்கலாம் என்பதை நான் உணருகின்றேன். தங்களுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காக ஊழியக் களத்திலிருந்து முன்னதாகவே திரும்புகின்றவர் கொண்டுள்ள குற்றவுணர்வை நான் இன்னும் அதிகமாய்ப் பாரப்படுத்துவதற்கு விரும்பவில்லை. இந்தப் பகுதியில், ஊழியத்தையல்ல தங்களைப் பற்றியே அதிகம் கவலைப்படும் ''யோவான் மாற்குகளின்'' மனப் பக்குவம் இல்லாமை பற்றி மட்டுமே நான் பேசுகின்றேன். [24]"கள்வர்களால் வந்த மோசங்களிலும்" (2 கொரி. 11:26) என்று பேசிய (எழுதிய) போது பவுல் இந்தப் பயணத்தை மனதில் வைத்திருந்திருப்பார். [25]பம்பிலியா நாடானது "உலகத்திலேயே மலேரியா நோய் பிடிக்க" முதலிடம் பெற்ற நாடு என்று அழைக்கப்பட்டிருந்தது. சிலர், மலேரியா நோயிலிருந்து மீளவும் பழைய ஆரோக்கியத்தைப் பெற முடியாமல் போனதை பவுலின் "மாம்சத்தில் இருந்த முள்" (2 கொரி. 12:7, 8) என்று நம்புகின்றார்கள். அது உண்மையா அல்லவா என்று நாம் அறியவில்லை.

## உபவாசமும் கிறிஸ்தவரும்

*வேதாகமத்தில் நம்மை உபவாசம் இருக்கும்படி கூறும் கட்டளையொன்றை என்னால் காண முடியவில்லை. மோசேயின் பிரமாணத்தில் (பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களில்) ''உபவாசம்'' என்ற வார்த்தையின் எந்த வடிவமும் காணப்படவில்லை. ஆத்துமாவைத் தாழ்த்துவது (எ.கா. லேவி. 16:29, 31) என்ற குறிப்பு மட்டுமே இதற்கு நெருக்கமான சிந்தனையாக மோசேயின் பிரமாணத்தில் காணப்படுகின்றது. நமது ஆத்துமாவைத் தாழ்மைப் படுத்துவதற்கு, உபவாசம் ஒரு வழி முறையாகும் (சங். 35:13 ஐக் கவனிக்கவும்). பழைய ஏற்பாட்டின் பிற்பகுதி முழுவதிலும் உபவாசம் என்பது பாவத்திற்காக மனஸ்தாபப்படுதலுடன் இணைந்துள்ளதாய் இருந்தது. சகரியாவின் நாட்களில், யூத வரலாற்றில் துன்பமிக்க நிகழ்ச்சிகளை நினைவுகூருவதற்காக நான்கு, ஐந்து, ஏழு மற்றும் பத்தாம் மாதங்களில் குறிப்பிட்ட உபவாச நாட்கள் நியமிக்கப்பட்டன. இயேசுவின் நாட்களில், இவ்வருடாந்திர உபவாசங்களுடன் கூடுதலாக, வாரத்தில் இரண்டு நாட்கள் உபவாசத்தையும் பரிசேயர்கள் நியமித் திருந்தார்கள் (லூக். 18:12): அது வாரத்தின் ஐந்தாம் நாளும் (ஏனென்றால் கற்பலகைகளுடன் மோசே மலையின் மேல் ஏறிச் சென்றது அந்த நாளில்தான் என்று அவர்கள் நம்பி னார்கள்), மற்றும் வாரத்தின் இரண்டாம் நாளும் (ஏனென்றால் மோசே மலையிலிருந்து இறங்கி வந்தது அந்த நாளில்தான் என்று அவர்கள் நம்பினார்கள்) ஆகும்.*

*உபவாசம் என்பது ஒரு கட்டளையாக இல்லாவிட்டாலும், அது மனஸ்தாபத்தை வெளிப்படுத்தும் ஒரு வழி முறை என்று மத்தேயு 6:16-18ல் இயேசுவால் ஒப்புக் கொள்ளப்பட்டது. இருப்பினும், அவர் உபவாசம் என்பது தேவனுக்கும் தனி நபருக்கும் இடையில் அந்தரங்கமாயிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார். மேலும் ஒருதரம் இயேசு, மாற்கு 2:18-20ல் (மத். 9:14, 15; லூக். 5:33-35 வாசிக்கவும்) உபவாசத்தைப் பற்றிக்*

குறிப்பிட்டார். இயேசுவின் சீஷர்கள் உபவாசம் இருக்க வில்லை என்பதைக் கவனியுங்கள். (இரட்சிப்புக்கு உபவாசம் அவசியம் என்றால், நிச்சயமாய் அவர்கள் அதைச் செய்திருப் பார்களே.) அதற்கு மாறாக, இயேசு இப்பூமியை விட்டுச் சென்ற பிறகு அவர்கள் உபவாசம் இருப்பார்கள் என்று இயேசு கருதினார். எப்பொழுது, எப்படி என்பதெல்லாம் நமக்குக் கூறப்படவில்லை.

இது நம்மைக் கிறிஸ்துவின் யுகத்தினுள் கொண்டு வருகின்றது. தனிப்பட்ட ஆராதனையின் ஒரு பகுதியாக கிறிஸ்தவர்கள் உபவாசமிருந்ததற்கான குறிப்பு எதையும் நாம் காண்பதில்லை (பவுல் உணவு இல்லாதபோது விருப்பமற்ற உபவாசம் இருந்ததை [2 கொரி. 6:5; 11:27] நாம் தவிர்த்து விடமுடியும்). கிறிஸ்தவர்கள் சுயவிருப்பமுள்ள உபவாசம் மேற்கொண்டதற்குப் பின்வரும் இரண்டு வசனக் குறிப்புகள் மட்டுமே உள்ளன: அப். 13:2, 3 மற்றும் 14:23. இவையிரண்டும் சபையாரால் நியமிக்கப்பட்டவைகளாகும். (KJVயில் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பிலும் மற்ற அநேக வேதவசனங்களில் "உபவாசம்" என்ற வார்த்தை உள்ளது, ஆனால் அவைகள் மிகச் சிறந்த கையெழுத்துப் பிரதிகளினால் ஆதாரப்படுத்தப் படுவதில்லை.) கிறிஸ்தவர்கள் தனியாய் உபவாசம் இருந்திருந் தாலும் (மாற். 2ன் அடிப்படையில்), இதைக் குறித்து நமக்குச் சொல்வது தகுதியானதென்று தேவன் காணவில்லை.

பின்வரும் முடிவுகளை நான் அடைந்துள்ளேன்: (1) கிறிஸ்தவரைப் பொறுத்தமட்டில் உபவாசம் என்பது சுயதேர்வுடையதும், சுயவிருப்பத்தின்படியானதுமாகும். உபவாசத்திற்கான "விதிகள்" (எப்போது, எப்படி என்பது போன்றவைகள்) புதிய ஏற்பாட்டில் நியமிக்கப்படவில்லை. சிலர், திட்டமிட்டு, ஒழுங்கான முறையில் உபவாசம் இருப்பது ஆவிக்குரிய முறையில் பிரயோஜனமாயிருப்பதாகக் கண்டிருக் கின்றார்கள்; மற்றவர்கள் அப்படிக் காணவில்லை. (2) உப வாசம் என்பது வழக்கமாக, ஜெபத்துடன் இணைந்துள்ளது. ஜெபத்தில் தரித்திருப்பவர்கள் தேவனுடன் தொடர்பு கொள்ளும் தீவிரத்தில் நேரம், பசி ஆகியவற்றை மறந்து விடுகின்றார்கள். அப்படிப்பட்ட ஜெப வாழ்க்கையே நம் அனைவருக்கும் தேவையாகும். (3) உபவாசமே சுயதேர்வு மற்றும் சுய விருப்பத்தின்படியானதாக இருக்கையில், கர்த்தர்

மற்றும் அவர் நிமித்தம் செய்யும் பணிகள் ஆகியவை (உணவு உண்ணுதல் உட்பட) மற்ற யாவற்றைப் பார்க்கிலும் அதிக முக்கியத்துவம் உடையவைகளாய் இருக்கின்றன (மத். 6:33). உணவைச் சந்தோஷமாய் தியாகம் செய்து (உபவாசம் இருந்து) நேர்மையாக கேட்கும் ஆத்துமாவிற்குப் போதிக்கின்ற அல்லது உடைந்த இருதயத்தை ஆறுதல் செய்கின்ற அநேக பரிசுத்தவான்களை நான் அறிவேன்.